# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## <u>OS.No.33/2018</u>

PW1–ஜெயராணி நாள்.07.03.2026

**<u>4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் சோபியா, ரத்தீஸ்குமாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் அவர்கள் எங்களிடம் பிளாட் வாங்கிவிட்டு இரண்டு வருடம் கழித்து திருப்பி பணத்தை கொடுங்கள் என்று தகராறு செய்ததால் இந்த வழக்கு போட்டுள்ளேன். கிரயம் வாங்கும்போது சொத்தின் அனைத்து விவரங்களையும் தெரிந்துகொண்டுதான் கிரயம் வாங்கினேன். என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் தானசெட்டில்மெண்ட் மூலம் சர்வே எண்.13/2ல் ஒரு ஏக்கர் 18 1/2 செண்ட் கொடுக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சுப்ரமணியன் விற்பனைசெய்யும்போது அதே சர்வேஎண்ணில் தனக்கு பாத்தியப்பட்ட இரண்டு ஏக்கர் என்று சொல்லி விற்பனை செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் சொத்து வாங்கும்போது ஆவணங்கள் முறையாக உள்ளதா என்று பார்த்து வாங்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எதிராக 3ம் பிரதிவாதி பெரம்பலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி எதிர்வாதம் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவாசொத்தை 1989ல் வாங்கி 2015ம் ஆண்டில் விற்றேன். இடைப்பட்ட காலத்தில் சொத்தை சர்வேயர் மூலம் அளந்தேனா என்றால் பட்டா வாங்கும்போது சர்வேயர் அளந்தார். அந்த இடம் சம்மந்தமாக 4ம் பிரதிவாதி எனக்கு எதிராக பெரம்பலூர் வருவாய் கோட்டாட்சியரிடம் பட்டா மாறுதல் சம்மந்தாக மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. என்கணவரின் சொத்து அருகில் உள்ளது. முறையான விசாரணை இல்லாமல் எனக்கும், என்கணவருக்கும் பட்டா வழங்கப்பட்டதால் தான் 4ம் பிரதிவாதி மேல்முறையிடு செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்களை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், இதுசம்மந்தமாக 1ம் பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.ஆ.18 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்பெயருக்கு வழங்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டு 4ம் பிரதிவாதியின் சொத்து என்று முடிவு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய சொத்து சர்வேஎண்.13/2பி1 ல் உள்ளது என்றும், 4ம் பிரதிவாதியின் சொத்து 13/2பி6ல் உள்ளது என்று பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் 1, 2 பிரதிவாதிகளுக்கு சர்வேஎண்.13/2பி1 என்று குறிப்பிட்டு விற்றுள்ளேன் என்றால் தெரியாது. தாவா சொத்தை நான் 1ம் பிரதிவாதிக்கு

விற்றேன், அவர் அதை 2ம் பிரதிவாதிக்கு விற்றார். 1ம் பிரதிவாதி சொத்தை என்னிடம் கிரயம் வாங்கும்போது அளந்துவாங்கவில்லை என்றால் சரியல்ல. அளந்துதான் வாங்கினார். சர்வேயர் வைத்து அளக்கப்பட்டது. எந்த சர்வேயர் என்று ஞாபகமில்லை. சொத்தை என்பெயரில் கிரயம் பெற்ற பின்னர் 16 வருடங்களாக நான் எந்த வரியும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. பதிவுசெய்த ஆவணத்தின் அடிப்படையில் வைத்து மட்டுமே வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், வருவாய்துறை ஆவணங்களில் மூலம் பூமியில் உள்ள அளவு, அமைப்பை சரிபார்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே எனக்கும் 3, 4 பிரதிவாதிகளுக்கு இடையே உள்ள பிரச்சனை குறித்தும் மற்றும் 3ம் பிரதிவாதி தாக்கல் செய்த வழக்கு பற்றி குறித்தும் தெரிவிக்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்தவழக்கில் அரசு தரப்பை சேர்க்காததால் நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட சர்வேஎண் மற்றும் அதற்குரிய இடம் குறித்து சரிபார்க்காமல் இந்தவழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொத்தை விற்பனை செய்யும்போது அரசு பணியில் ஏதும் கிடையாது. எனக்கு சொத்து பற்றிய அடிப்படை விவரம் எதுவும் தெரியாது என்றும், பினாமியாக என்கணவர் என்பெயரில் கிரயப்பத்திரம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. வருவாய்துறை நிலஅளவையரை வைத்து சொத்தை அளந்தால் தான் தாவாசொத்தின் உண்மை நிலவரம் பற்றி தெரியவரும் என்றால் சரியல்ல. அரசு தரப்பை சேர்க்காததாலும் தாவா சொத்தை பற்றிய விவரங்கள் எனக்கு முழுமையாக தெரியததாலும், நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.